## 2.4 கிராம ஊராட்சிகளில் கிராம சபை கூட்டம் காலாண்டிற்கு ஒருமுறை கூட்டுதல்

ஊரக வளர்ச்சி (சி1)துறை

அரசாணை (நிலை) எண்.245 நாள் : 19.11.1998

படிக்க :

1. அரசு ஆணை (நிலை) எண்.150 ஊரக வளர்ச்சித் துறை, நாள் 17.7.1998.
2. அரசு ஆணை (நிலை) எண்.152, ஊரக வளர்ச்சித் துறை, நாள்20.7.98.
3. மத்திய அரசு ஊரக வேலை வாய்ப்பு மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின் மாநில அமைச்சர் அவர்கள் 8.9.98 நாளிட்டு மாண்புமிகு தமிழக முதல்வருக்கு அனுப்பிய கடித எண். நே.மு.ஆர்.12011/4/98–பி.ஆர்.

**ஆணை**

1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 3ல் கிராமசபை மற்றும் அதன் நடவடிக்கைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஊராட்சிகளில் கிராமசபை கூட்டம் நடத்துவது குறித்து 1998ம் ஆண்டு தமிழ்நாடு கிராமசபை (குறைவெண்வரம்பு மற்றும் கூட்ட நடவடிக்கை நடைமுறை) விதிகள் வெளியிடப்பட்டுள்ளது. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் கிராமசபைக்கான செய்கடமைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. மேற்படி சட்டப்பிரிவு 3(2)ன்படி கிராமசபை கூட்டம் வருடத்தில் குறைந்தது இரண்டு முறையேனும் கூட்டப்பட வேண்டும். அந்த இரண்டு கூட்டங்களுக்கு இடையேயும் ஆறு மாத கால இடைவெளி இருத்தல் கூடாது என்பது வரையறுக்கப்பட்ட விதிகளாகும்.

2. பார்வை மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் இந்தியாவில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கிராமசபை கூட்டங்கள் அவ்வூராட்சி தலைவர்களால் ஒவ்வொரு காலாண்டிலும் முன்னரே குறிப்பிட்ட நாட்களில் கூட்ட வேண்டுமென்ற அடிப்படையில் தமிழ்நாட்டிலுள்ள ஊராட்சித் தலைவர்களுக்கு அறிவரைகள் வழங்குமாறு மத்திய அரசின் ஊரக வேலை வாய்ப்பு மற்றும் ஊரக வளர்ச்சித் துறை மாநில அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் கிராமசபை கூட்டங்கள் தேசிய விடுமுறை நாட்களான ஜனவரி 26 (குடியரசு தினம்), மே 1 (தொழிலாளர் தினம்), ஆகஸ்டு 15 (சுதந்திர தினம்), அக்டோபர் 2 (காந்தி பிறந்த நாள்) ஆகிய நாட்களில் நடத்தலாம் என்றும் கருத்து தெரிவித்துள்ளார்.

3. மேலே பத்தி 2ல் உள்ள மத்திய அரசின் கருத்துருவினை அதி கவனமுடன் பரிசீலித்தது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் வேண்டுகோளுக்கினங்க 1998ம் ஆண்டு அக்டோபர் 2ம் நாள் மகாத்மா காந்தி பிறந்த நாளன்று தமிழ்நாட்டிலுள்ள 12593 ஊராட்சிகளில் 12456 ஊராட்சிகளில் கிராம சபை கூட்டங்கள் சிறப்பான முறையில் நடைபெற்றுள்ளன. மேலும் அக்கிராம சபை கூட்டங்களில் மாவட்ட ஆட்சியர்களும், அரசின் பல்வேறு அலுவலர்களும் கலந்துகொண்டு கிராம சபையின் நோக்கம் மற்றும் அரசின் அனைத்துத்துறை நலத்திட்ட பணிகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள சூழ்நிலையில் மைய அரசின் கருத்துருவினை ஏற்று அடுத்து வரும் ஆண்டுகளில் ஒவ்வொரு காலாண்டிலும் கிராசபை கூட்டத்தை குறிப்பிட்ட நாட்களில் கூட்டவும் அக்கூட்டத்தில் என்னென்ன பொருட்கள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்பதை வரையறுக்கவும் அக்கூட்டங்களில் அரசு அலுவலர்கள் பற்றாளர்களாக (Nodal Officer) கலந்துகொள்ள அனுமதிக்கவும் அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி வரும் ஆண்டுகளில் கிராமசபை கூட்டங்கள் ஊராட்சித் தலைவர்களால் கூட்டுவதற்கு அரசினால் தீர்மானிக்கப்பட்ட நாட்கள் மற்றும் அக்கூட்டத்திற்கான விவாத பொருட்கள் கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்யப்படுகிறது.

## 2. GRAMA SABHA

| கால அளவு (1) | வரையறுக்கப்பட்ட நாள் (2) | விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டிய பொருள் (3) |
|---|---|---|
| முதல் காலாண்டு (ஏப்ரல், மே, ஜுன் ஆகிய மாதங்கள் | தொழிலாளர் தினம் (மே திங்கள் முதல் நாள்) | அரசின் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளின் கீழ் பயன்பெறும் பயனாளிகள் பட்டியல் மற்றும் ஊராட்சிகள் ஒப்புதல் அளித்த வளர்ச்சிப் பணிகள் கிராசபைக் கூட்டத்திற்கு முன்னர் வைக்கப்படுதல். |
| இரண்டாம் காலாண்டு (ஜுலை, ஆகஸ்டு, செப்டம்பர் ஆகிய மாதங்கள்) | சுதந்திர தினம் (ஆகஸ்டு திங்கள் பதினைந்தாம் நாள்) | வறுமை ஒழிப்புத் திட்டம் உட்பட அனைத்து துறைகளிலும் மேற்கொள்ளப்படும் திட்டங்களினால் தனிநபர் மற்றும் சமுதாயத்தினர் ஒவ்வொரு திட்டத்தின் கீழும் பயன்பெறும் தன்மையினை எடுத்துரைத்தல் |
| மூன்றாவது காலாண்டு (அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்கள்) | காந்தி பிறந்த நாள் (அக்டோபர் திங்கள் இரண்டாம் நாள்) | 1.ஊராட்சி மற்றும் அரசின் இதர துறைகள் மேற்கொள்ளளும் வளர்ச்சி பணிகள் குறித்து இடைநிலைஆய்வு மேற்கொள்ளல்.<br>2.ஊராட்சியின் முந்தைய ஆண்டிற்கான ஆண்டறிக்கை மற்றும் வரவு செலவு கணக்கின் மீதான தணிக்கை குறிப்புகள் கிராம சபை கூட்டத்திற்கு முன் சமர்ப்பித்தல் |
| நான்காவது காலாண்டு ஜனவரி, பிப்ரவரி, மார்ச் (ஆகிய மாதங்கள்) | குடியரசு தின விழா (ஜனவரி திங்கள் இருபத்தாறாம் நாள்) | ஊராட்சியின் வளர்ச்சி பணி தொடர்பாக அடுத்து வரும் நிதி ஆண்டிற்கான திட்ட அறிக்கையினை கிராமசபை கூட்டத்தின் முன் வைத்து ஒப்புதல் பெறுதல் |

4. சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் கிராமசபை கூட்டம் நடைபெறும் நாட்களில் தங்கள் கீழ்பணிபுரியும் பல்வேறு துறை அலுவலர்களை பற்றாளர்களாக (Nodal Officer) அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். கிராமசபை கூட்டம் முடிந்தவுடன் மாவட்ட ஆட்சியர்கள் தங்களது அறிக்கையை ஒரு வாரத்திற்குள் ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து பெறப்பட்ட அறிக்கைகளை ஒருங்கிணைத்து காலாண்டிற்கு ஒருமுறை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு ஊரக வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்